# 9.நவ்ரு

*இ.ஜே.சுந்தர்*






உலகிலேயே குறைவான மக்கள் தொகையுடைய ஐ.நா உறுப்பு நாடு -

உலகிலேயே சிறிய தீவு நாடு- அதிகாரப்பூர்வமான தலைநகரமே இல்லாத நாடு- வருமான வரி உட்பட எந்த வரியும் இல்லாத நாடு- இராணுவமே இல்லாத நாடு- நாளிதழே இல்லாத நாடு- உலகிலேயே மிகுதியான தடியர்கள் உள்ள நாடு - இவை எவை? எவை? என்ற கேள்விக்கு ஒரே பதில் நவ்ரு என்பதாகும். இத்தனை தனித்தன்மைகள் நிறைந்த இந்த நாட்டின் பெயர் ஏற்கனவே எனக்குத் தெரியும் என்று கூறுவோர் இருப்பின் அவர்களுக்குப் புவியியல் புலி என்று பட்டம் தரலாம்.

தென் பசிபிக் கடலில், புவிநடுக்கோட்டிற்குத் தெற்கே 53 கி.மீ தொலைவில் இதுவரை இன்னும் கண்டுக்கொள்ளப்படாத இந்த நீள்வட்டத்தீவை 1798 இல் திமிங்கில வேட்டைக்காரரும், பிரிட்டிஷ் மாலுமியுமான ஜான் பர்ன் என்பவர் கண்டுபிடித்து இதற்கு மகிழ்ச்சித்தீவு (Pleasant Island) என்று பெயரிட்டார். எனினும் 3000 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு பாலினேசியாவிலிருந்தும், மைக்ரோனேசியாவிலிருந்தும் மானிடக்குடியேற்றம் நிகழ்ந்துள்ளது. இந்த

வகையில் 12 இனக்குழுக்கள் இந்த நாட்டின் பூர்வீகக்குடிகளாக இங்கு வாழ்கின்றனர்.. இந்த 12 இனக்குழுக்களை அடையாளப்படுத்தும் வண்ணம் நவ்ருவின் தேசியக் கொடியில் 12 முனை விண்மீன் அமைந்துள்ளது.

வடமேற்கே மைக்கிரோனிஷிய கூட்டமைப்பு நாடுகள், வடக்கே மார்ஷல் தீவுகள், கிழக்கே பனாபா தீவு(கிரிபாட்டி),தென்கிழக்கே தூவலு, தெற்கே வனாட்டு, தென்மேற்கே சாலமோன் தீவுகள் மற்றும் பாப்புவா நியூ கினி ஆகியன நவ்ருவின் அண்டை நாடுகளாகும். ஆஸ்திரேலியா இங்கிருந்து 4500 கி.மீ தொலைவில் உள்ளது. 1888 இல் ஜெர்மனி இந்நாட்டைக் கைப்பற்றி தன்னுடன் இணைத்தது. பின் முதல் உலகப்போருக்குப்பின் ஆஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து ஆகிய 3 நாடுகளில் கட்டுப்பாட்டில் நவ்ரு சிக்கியது. 2ஆம் உலகப்போரின்போது ஜப்பான் இந்நாட்டைப்பிடித்தபோது மக்கள் பல இன்னல்களை அனுபவித்தனர். பின் 1947- இல் மீண்டும் இந்த 3 நாடுகளில் கட்டுப்பாட்டிலும் ஆஸ்திரேலியாவின் நிர்வாக ஆளுமையிலும் இந்நாடு இருந்து 1968 இல் விடுதலை பெற்று நாடாளுமன்ற குடியரசு நாடாக 21 ச.கி.மீ பரப்புடன் தனியாட்சி தொடங்கியது.


*நவ்ருவின் கொடி*

உலகிலேயே மிகக் குறைந்த மக்கட்தொகையும், பரப்பளவும் உள்ள நாடாக 1999 இல் நவ்ரு குடியரசு ஐ.நாவின் உறுப்பு நாடாக இணைந்தது. வத்திக்கானும், மொனாக்காவும் நவ்ரு வைவிடச் சிறிய நாடுகளாயினும் அவை முற்றிலும் சுயேட்சையான நாடுகள் அல்ல. ஐ.நாவில் மட்டுமன்றி, காமென்வெல்த் அமைப்பிலும், ஆசிய வளர்ச்சி வங்கி குழுவிலும், பசிபிக் தீவுகளின் அமைப்பிலும் இக்குட்டி நாடு அங்கம் வகிக்கிறது. 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தி, 19 பேர் கொண்ட நவ்ரு நாடாளுமன்றம் அதிபரைத் தேர்ந்தெடுக்கிறது. அதிபர் ஐந்தாறு பேர் கொண்ட அமைச்சரவையைத் தேர்வு செய்வார். இன்றைய அதிபர் பாரன் வாக்வா என்பவராவார்.

பெரும் வளர்ச்சியும், பின் மோசமான வீழ்ச்சியும் இந்நாட்டின் சோக வரலாறாகும். 1899- இல் இங்கு உயர்தர பாஸ்பேட் தாது இருப்பது ஆல்பர்ட் எல்லீஸ் என்பவரால் முதலில் கண்டறியப்பட்டவுடன் இந்நாடு செழிக்கத்தொடங்கியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் கடல்பறவைகள் இங்கு இட்ட எச்சமே பாஸ்பேட்டு பாறைகளாக உறைந்திருந்தன. 1906 முதல் இங்கு பாஸ்பேட் சுரங்கங்கள் அமைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியானது. இங்குள்ள பாஸ்பேட்டு உயர்தரமானது மட்டுமன்றி மேல்தளத்திலிருந்து எளிதாக எடுக்கும் வண்ணம் அமைந்துள்ளது சிறப்பிற்குரியதாகும்.



*பாஸ்பேட்டு சுரங்கம்*

ஆஸ்திரேலியாவும், பிரிட்டனும், நியூசிலாந்தும் இதனால் பெரும் வருவாய் ஈட்டின. விடுதலைக்குப்பின் இவ்வருவாய் முழுவதும் இந்நாட்டிற்குக் கிடைத்தமையால் 1980 களில் தொடக்கத்தில் சௌதி அரேபியாவிற்கு அடுத்தபடி தனிநபர் வருவாய் மிகுந்த தேசமாக நவ்ரு கொழித்தது.



*குண்டான நவ்ரு தம்பதியர்*

மக்கள் செல்வச்செழிப்பில் வாழ்ந்ததன் விளைவாகவோ என்னவோ நவ்ருக்கள் மிகவும் உடல் பருமன் மிகுந்தவர்கள் ஆயினர். உலகிலேயே உடல் நிறைகுறியீட்டு எண் ( BMI- Body mass index) அதிகமாக உள்ள மக்கள் நவ்ருக்களே. உலக சராசரி 18.5 - 24.9 என்ற அளவில் இருக்க இங்கு சராசரி 34- 35 என்ற அளவில் உள்ளது.



*அதிபர் பாரன் வாக்வா*

இந்நாட்டின் அதிபர் உருவமே இதற்கு எடுத்துக்காட்டாகும். 94.5% மக்கள் அதிக எடையுடன் இருப்பதால் 40% மக்கள் நீரிழிவு நோய்க்கு

ஆளாகியுள்ளனர். நீரிழிவு நோய் பாதிக்கப்பட்ட நாடுகளில் நவ்ருவுக்கு இரண்டாவது இடம். நாட்டின் 90% நிலம் பாஸ்பேட் சுரங்கப்பணியில் ஈடுபடுத்தப்பட்டதால் 1990 களில் எல்லா பாஸ்பேட் தாதுக்களும் தீர்ந்து போய் நாடே சுற்றுச்சூழல் வெறுமைக்கும் அதனால் வறுமைக்கும் உள்ளானது. ஒரு நூற்றாண்டு காலம் இந்நாட்டை ஒட்ட சுரண்டியவர்கள் நட்ட ஈடு தரவேண்டுமென நவ்ரு அரசு உலக நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. 1993 இல் ஆஸ்திரேலியா, நீதி மன்றத்திற்கு வெளியே சமாதான பேச்சிற்கு உடன்பட்டு, அடுத்த 20 ஆண்டுகள் வரை ஆண்டுக்கு 2.5 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர்களை வழங்க முன்வந்தது. நியூசிலாந்தும், இங்கிலாந்தும் தலைக்கு ஒரே தவணையில் 12 மில்லியன் டாலர்கள் நட்ட ஈடு வழங்கி நவ்ருவின் முறையீட்டைச் சரிக்கட்டின. தொடர்ந்து சிறிய அளவில் பாஸ்பேட்டு எடுக்கப்பட்டு வந்தாலும் உலக அளவில் பாஸ்பேட்டுக்கான தேவையும், விலையும் குறைந்துள்ளதாலும், அரசின் மோசமான நிர்வாகச் சீர்கேடுகளாலும் அரசே 1990 களில் திவாலானது. பணம் கொடுத்தால் வெளிநாட்டினருக்குக் குடியுரிமை தருதல், வங்கியில் வெளிநாட்டினர் நிதி மோசடி செய்ய வழிகோலுதல் இவற்றிற்கு அரசு உதவியது. ரஷ்ய குற்றவாளிகள் இங்குள்ள வங்கிகளைப் பயன்படுத்தி தந்திரமான நிதி தகிடுதத்தங்கள் செய்தனர். இதனால் பாதிக்கப்பட்ட ஜி-7 நாடுகள் நௌரிக்கு அழுத்தம் தந்து அதன் வங்கி நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்ய வற்புறுத்தின.

2015-இல் நவ்ருவின் மக்கட்தொகை 9540 மட்டுமே. சில ஆண்டுகளுக்கு முன் இதைவிட மிகுதியாக இருந்த மக்கள் தொகை பாஸ்பேட்டு ஏற்றுமதியின் வீழ்ச்சியால், பலரும் வெளிநாடுகளுக்குக் குடியேறிய நிலையில் குறைந்துவிட்டது. 90% மக்கள் இன்று வேலையின்றியுள்ளனர். வேலையில் இருப்போரும் 95% அரசு பணிகளில்தான் உள்ளனர். மக்களின் இனப்பாகுபாடு வருமாறு; நவ்ருக்கள்- 58%, பிற பசிபிக் தீவினர்-26%, சீனர்- 8%, ஐரோப்பியர்-8%. மண்ணின் மொழியான நவ்ருவன் மொழி 96% நவ்ருவர்கள் வீடுகளில் பேசப்பட்டு வந்தாலும், ஆங்கிலமே பொதுமொழியாக, அரசு, வணிக, கல்வி, மொழியாக நாட்டில் கோலோச்சுகிறது. நவ்ருவன் மொழி இந்நாட்டிற்கு வெளியே எங்குமே பேசப்படாமையாலும், இம்மொழி பிற அண்டை நாட்டு

மொழிகள் எவற்றோடும் தொடர்பற்று இருப்பதாலும் இம்மொழியின் தோற்றுவாய் புதிராகவே உள்ளது. நாட்டில் இன்னும் பூர்வீக சமயத்தில் நம்பிக்கையுடையவர்கள் பெண்தெய்வமான எஜிபோவை வழிபடுகின்றனர். பியூட்டன் என்ற ஆவிநாட்டை நம்புகின்றனர். எனினும் கிறித்துவமே இன்றைய பெரும்பாலான மக்களின் சமயமாகும். கிறித்துவர்களில் 2/3 பேர்கள் புராட்டஸ்டண்டு பிரிவினர்; 1/3 பேர்கள் ரோமன் கத்தோலிக்கர். இசுலாமியர், பௌத்தர், பகாய் சமயத்தினர் மிகச்சிறுபான்மையில் உள்ளனர். 6 வயது முதல் 15 வயது வரை இங்கு கல்வி கட்டயாமாக்கப்பட்டுள்ளதால் எழுத்தறிவுடயோர் 96% ஆக உள்ளனர்.

புவிக்கோட்டிற்கு மிக அருகே இருப்பதால் பெரும்பாலும் ஆண்டுமுழுவதும் இந்நாடு வெப்பமாகவே உள்ளது. நவம்பர் - பிப்ரவரி மழைக்காலம். பெரும்புயலோ, சுனாமியோ வரும் ஆபத்து இந்நாட்டிற்கு இல்லை. எல்நினோவால் அவ்வப்பொழுது மழை பொய்த்து வறட்சி நிலவுகிறது. வெப்பமயமாதலால் கடுமையாகப் பாதிக்கப்படும் நாடுகளில் இதுவும் ஒன்று. கடல்மட்டம் அடிக்கடி உயர்ந்து வெள்ள அபாயம் நிகழ்வது இங்கு வாடிக்கை. 213 அடி உயரமுள்ள கமான்ட் ரிட்ஜ் என்ற நாட்டின் உயரமான இடத்தின் மேலிருந்து நாடு முழுவதையும் பார்க்கலாம். நாடாளுமன்றம், நிர்வாக அலுவலகங்கள், விமானநிலையம் இவற்றோடு வெறும் 1500 பேர் கொண்ட நாட்டின் பெரிய நகரமான யாரென், தலைநகர் போலக் கருதப்பட்டாலும், அதிகாரப்பூர்வமான தலைநகரம் இந்நாட்டிற்கு ஏதுமில்லை.



*விமான ஓடுபாதை*

விமானநிலைய ஓடுதளம் முக்கிய சாலைக்கு இடையே அமைந்துள்ளது. புவடா லாகூன் என்ற நன்னீர் ஏரியே நாட்டின் ஒரே நீராதாரம். இது போதாமையால், மழை நீரைச்சேமித்தும், கடல்நீரைக் குடிநீராக்கியும் சமாளிக்கிறார்கள். 30 கி.மீ நீளும் மணற்பாங்கான கடற்கரை இந்நாட்டின் எழிலார்ந்த பகுதியாகும்.




*அழகிய கடற்கரை*

தென்னை மரங்கள் மிகுதியாக வளர்வதால், தென்னைப்பொருள்கள் நாட்டின் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பவழப்பாறைகளால் நாடு சூழ்ந்துள்ளது. அலைகள் குறையும் போது பவழப்பாறைகள் வெளிப்படுகின்றன. பவழப்பாறைகளின் மிகுதியால் துறைமுகம் ஒன்றையும் ஒழுங்காக இந்நாட்டில் அமைக்கமுடியவில்லை. பவழப்பாறைகளின் நடுவே உள்ள சிறு இடைவெளிகளில் சிறு படகுகள் மட்டுமே நுழைய முடியும்.

ஆண்டுக்கு இங்கு ஏறத்தாழ 200 சுற்றுலாப் பயணிகள் மட்டுமே வருகின்றனர்.

எத்தனையோ இடர்பாடுகளும், குறைபாடுகளும் நாட்டில் இருந்தாலும், சில உயர்ந்த பண்பாடுகளை மக்கள் கடைப்பிடிக்கிறார்கள். கிறித்துவ நம்பிக்கை காரணமாக எங்கு மக்கள் கூடினாலும், செபம் செய்துவிட்டே அடுத்த செயலில் இறங்குகின்றனர். பெரியோருக்கு வயதில் சிறியோர் மரியாதை செலுத்துவதும், தாய்மார்களை மரியாதைக்குரியவர்களாக நடத்துவதும் இங்கு தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படும் பழக்கங்கள். ஓரினச்சேர்க்கை கடுமையான குற்றமாகக் கருதப்பட்டுச் சிறைதண்டனை வழங்கப்படுகிறது.

நாட்டின் வருமானம் பாதிக்கப்பட்டும், நாடாளுமன்றத்திற்கு வரிபோடும் உரிமை இருந்தும் வருமான வரி உட்பட எந்த வரியையும் மக்கள் நலன் கருதி அரசு விதிப்பதில்லை. நாட்டில் இராணுவமே இல்லை என்பதால் பாதுகாப்பிற்கு ஆஸ்திரேலியாவுடன் இதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பலவற்றிற்கும் நவ்ரு ஆஸ்திரேலியாவையே சார்ந்துள்ளது. ஆஸ்திரேலிய டாலர்களையே தன் நாணயமாகப் பயன்படுத்துகிறது. ஆஸ்திரேலிய கால்பந்தாட்டமே மக்களின் விருப்ப விளையாட்டாக உள்ளது. நவ்ரு தொலைக்காட்சியும், வானொலியும் ஆஸ்திரேலிய நிகழ்ச்சிகளையே பெரிதும் பயன்படுத்துகின்றன. பதிலுதவியாக, நவ்ரு, ஆஸ்திரேலியாவிற்கு வரும் அகதிகளைத் தன் நாட்டில் ஏற்று, தடுப்பு முகாம்களில் தங்க வைத்து ஆஸ்திரேலியாவிற்குச் சிரமத்தைக் குறைக்கிறது.



*அகதி முகாம்*

ஆஸ்திரேலியாவிற்கு வரவிருந்த, நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கைத்தமிழ் அகதிகளைத் தடுப்பு முகாம்களில் நவ்ரு தங்கவைத்துள்ளது.




*கப்பலில் வந்திறங்கும் தமிழ் அகதிகள்*

எனினும் இங்கு வரும் அகதிகள் பல கொடுமைகளுக்கு உள்ளாவதாய் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கடந்த இரண்டரை ஆண்டுகளாக நவ்ருவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 வயது இலங்கைத் தமிழரின் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து அவர் மரம் ஒன்றில் ஏறி தம் உயிரை மாய்த்துக் கொள்வதாகப் போராட்டம் நடத்தி அச்சுறுத்தினார். அவருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் உதவி கிடைக்க ஏற்பாடு செய்வதாக அதிகாரிகள் உறுதியளித்தனர். ஆனால் கீழே இறங்கி வந்தவுடன் அவரைக் காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



***சோதிக்கப்படும் தமிழ் அகதிகள்***

இதே போல அகதியாக வந்த தமிழ்ப்பெண் ஒருவர் முகாம்களில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தபட்டதும், அவர் ஆஸ்திரேலியாவிற்கு இடமாற்றம் கோரி உயிரை மாய்த்துக் கொள்வதாக அச்சுறுத்தியபின் திருப்பியனுப்பப்பட்டதும் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

*(வெற்றி வேந்தன்:ஏப்ரல் 2016)*

.